# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 116/2023 | Date : 17.04.2026 | PW 1 |
|---|---|---|
| Name: கேசவன் | த/பெ.மோகனகிருஷ்ணன் | |

**2-ம்எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன வினோத் என் மகன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகனுக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் மகன் பயணித்த காரை சுஜய் என்பவர் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமான மாதிரி வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் விபத்திற்கு சுஜய்தான் காரணம் என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய சுஜய்க்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றாலும் அதிவேகமாக சென்று அவருக்கு முன்னால சென்ற வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்த எனது மகன் பயணத்தின்போது முன் இருக்கையில் இருந்த சமயத்தில் சீட் பெல்ட் போட்டு பயணம் செய்திருந்தால் உயிர் சேதம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. சுஜய் என்பவர் வாகனத்தைஓட்டி விபத்தை ஏற்படுத்தியதால் அவருடைய இன்சூரன்ஸ் நிறுவனமான 4ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள தொகை மிக மிக அதிகம் என்றால் சரியல்ல.

ஒம்/-கேசவன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.